## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண்.171/2015

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | கே. ஆறுமுகம் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | காளியண்ணன் | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 62 | ஜாதி | .. | அருந்ததியர் |
| கிராமம் | .. | அரசிராமணி | நாள் | .. | 12.12.2019 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

வா.சா.3 – கே. ஆறுமுகம் - 1-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

இந்த வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால், தெரியும். தாவா சொத்தை வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 5, 6 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவித்து வருவதாக நான் கூறியிருக்கும் விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், பங்கு பிரித்துத்தான் அனுபவித்து வருகிறார்கள். ஆனால், எனது பிரமாணப்பத்திரிக்கையில் இன்றளவும், கூட்டாகத்தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால், சரிதான். வாதி, 1 முதல் 6 பிரதிவாதிகளிடம் பாகம் கேட்டார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியும். வாதி எனக்கு என்ன உறவு என்றால், மாமன் மகள். வாதியின் உறவினர் என்பதால், அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>

இன்றைய தேதியில் 1-ஆம் பிரதிவாதி நல்லையன் விற்பனை செய்தது போக மீதி இருக்கும் நிலத்தில் நெற்பயிர் செய்துள்ளார், 2 – 4 பிரதிவாதிகள் சிறிது நிலத்தில் கரும்பும், நெல்லும் பயிர் செய்திருக்கிறார்கள், நானும் எனது நிலத்தில் நெற்பயிர் செய்துள்ளேன் என்றால், சரிதான். நான் 7, 8 பிரதிவாதிகள் வசிக்கும் இடத்திற்கு அருகில் குடியிருக்கிறேனா என்றால், இல்லை, அதிலிருந்து 1 கிலோ மீட்டர் தள்ளி ஒடச்சக்கரை ஆலமரத்துத் தோட்டத்தில் குடியிருக்கிறேன். எனது பெற்றோர்களின் பெயர் காளியண்ணன், வேலாயி என்று சொன்னால், சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் பாவாயி, பாப்பாத்தி என்ற இரண்டு சகோதரிகள், கந்தசாமி, சித்தன் மற்றும் நான் ஆகியோர் சகோதரர்கள் என்றால், சரிதான். எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட

பூர்வீக சொத்து 3 ஏக்கர் இருந்தது என்றால், சரிதான். அந்த சொத்துக்களை பொறுத்து நானும், எனது சகோதரர்களும் நீண்ட நாட்களுக்கு முன்பாகவே ஆளுக்கு 1 ஏக்கர் நிலம் என வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால், சரிதான். அவ்வாறு வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்ததன் அடிப்படையில்தான் அரசாங்கம் எங்கள் மூவருக்கும் தனித்தனியாக பட்டா வழங்கியுள்ளது என்றால், சரிதான். அதன் அடிப்படையில்தான் எனது சகோதரர் கந்தசாமி ஒரு அம்மாசி என்பவருக்கு அவருக்கு பிரிந்த, மொத்த சொத்துக்களையும் விற்பனை செய்து விட்டார் என்றால், சரிதான். நானும், எனது சகோதரர் சித்தனுக்கு ஒரு 20 சென்ட் நிலத்தை விற்பனை செய்திருக்கிறேன் என்றால், சரிதான். மீதமுள்ள 80 சென்ட் நிலத்தை நான் தனியாகத்தான் அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால், சரிதான். எனது சகோதரி பாவாயி, அவரின் தங்கையான பாப்பாத்தி வீட்டில்தான் தற்போது வசித்து வருகிறார் என்றால், சரிதான். நாங்கள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டபொழுது, எங்களின் சகோதரிகள் இருவருக்கும் நிலம் கொடுத்தோமா என்றால், இல்லை, அவர்களின் திருமணத்தின் போது சரியான சீர்வரிசை கொடுத்து, திருமணம் செய்து கொடுத்து விட்டதால், அவர்களுக்கு நிலம் கொடுக்கவில்லை. இந்த வழக்கை வாதி எதற்காக தாகக்ல் செய்துள்ளார் என்று எனக்குத்தெரியுமா என்றால், தெரியும், வாதி காளியம்மாளுக்கு சீர்வரிசை எதுவும் கொடுக்கவில்லை என்பதால், பாகம் வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். காளியம்மாளுக்கு திருமணம் ஆகி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால், 30, 32 வருடம் இருக்கும். திருமணம் ஆன நாளிலிருந்து வாதி தனது கணவர் வீட்டில்தான் வசித்து வருகிறார் என்றால், சரிதான். காளியம்மாளுக்கு எத்தனை மகள்கள் என்றால், 2 மகள்கள், அதில் ஒருவரை இந்த 1-ஆம் பிரதிவாதியின் மகன் திருமணம் செய்துள்ளார் என்றால், சரிதான். அவர்களுக்கு திருமணம் ஆகி எத்தனை வருடம் இருக்கும் என்றால், ஒரு 10,12 வருடம் இருக்கும். 1-ஆம் பிரதிவாதியின் பெயர் நல்லையனா, நல்லியண்ணனா அல்லது நல்லியனா என்றால், நல்லியன். அவரை அவ்வாறு தான் அழைப்பீர்களா என்றால், ஆமாம். இன்று 1-ஆம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால், வந்துள்ளார். அவர்தான் என்னை இன்று நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தாரா என்றால், இல்லை, காளியம்மாள்தான் அழைத்து வந்தார். இன்றைய தினம் வாதி காளியம்மாள் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால், இல்லை. எனக்கும், 1-ஆம் பிரதிவாதிக்கும் ஒரே வயதா என்றால், இல்லை, அவர்

என்னை விட இளையவர். நல்லியனின் உடன்பிறந்த ஆண்மக்கள் யாரும் உயிருடன் இல்லை என்று சொன்னால், சரிதான். 1-ஆம் பிரதிவாதி எனது மாமா மகன் என்பதால், அவர் அழைத்ததன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. வாதியின் மாமனார் சின்னகுமார நாடார் காலமாகி எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால், அது சரியாக தெரியவில்லை, அப்போது எனக்கு சிறுவயது. பழனியப்பன் எப்போது இறந்தார் என்றால், அதுவும் சரியாக ஞாபகம் இல்லை. வாதி காளியம்மாள் மற்றும் 1-ஆம் பிரதிவாதி ஆகியோருக்கு யார் முன்னின்று திருமணம் செய்து வைத்தார்கள் என்றால், 1-ஆம் பிரதிவாதிதான். அவர்களின் திருமணத்தில் நான் கலந்து கொண்டேனா என்றால், இல்லை. எனவே, வாதிக்கு திருமணத்தின்போது எவ்வளவு நகை போட்டார்கள், சீர் சிறப்பு கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது என்று சொன்னால், சரியல்ல. வாதி, 1-ஆம் பிரதிவாதி மற்றும் வாதியின் சகோதரிக்கு பழனியப்பன்தான் திருமணம் செய்து வைத்தார் என்றால், சரியல்ல. நல்லியனுக்கும், அவரது அண்ணனுக்கும் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டு, ஒரு 40, 45 வருடம் இருக்குமா என்றால், இருக்கும். 1-ஆம் பிரதிவாதி தனக்குப் பாத்தியப்பட்ட ஒரு பகுதி சொத்தை யாருக்கு விற்பனை செய்தார் என்றால், முனியம்மாள் மற்றும் பெருமாள் (7, 8 பிரதிவாதிகள்). அவ்வாறு விற்பனை செய்யும்பொழுது, நான்குபுற எல்லையை குறிப்பிட்டு, விற்பனை செய்தார்களா என்றால், அது தெரியாது. விற்பனை செய்து எத்தனை வருடம் இருக்கும் என்ற விபரமாவது தெரியுமா என்றால், 8 வருடம் இருக்கும். 2 முதல் 4 பிரதிவாதிகள் யாருக்கு நிலங்களை விற்பனை செய்தார்கள் என்று தெரியுமா என்றால், முனியம்மாள், பெருமாள் ஆகியோருக்கு விற்பனை செய்தார்கள். யாருடைய பங்கை விற்பனை செய்தார்கள் என்றால், பழனியப்பன் பங்கை விற்பனை செய்தார்கள். வாதி தற்போது எவ்வளவு நிலங்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால், தெரியாது. தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட பொதுக்கிணறு ஒன்று உள்ளது, அது யாருடைய நிலத்தில் உள்ளது என்று தெரியுமா என்றால், கிணறு இருப்பதே தெரியாது. தாவா சொத்தைப் பற்றி தெரியாமலும், யார் எப்போது விற்பனை செய்தார்கள் என்ற விபரம் தெரியாமலும், 1-ஆம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது பிரமாணப்பத்திரிக்கைக்கு யார் விபரம் சொன்னது என்றால், நானே தெரிந்து கொண்டுதான் வந்தேன். உண்மைக்கு மாறாக யார் எங்குள்ளார்கள் என்ற விபரம்

தெரியாமல், சாட்சியம் அளித்துள்ளதால், எனது வாக்குமூலமே நிராகரிக்கத்தக்கது என்று சொன்னால், சரியல்ல. எனக்கு தாவா சொத்து குறித்து நேரடியாக எந்த விபரமும் தெரியாது என்று சொன்னால், சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பஞ்சாயத்து நடைபெற்றதாகவும், அதில் பாகம் கேட்டதாகவும் கூறியிருக்கிறீர்கள், எப்போது, எந்த தேதியில் நடந்தது என்றால், தேதி தெரியாது. உண்மையாக பஞ்சாயத்து நடைபெற்று இருந்தால், அதற்குரிய தேதியை நான் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பேன், பஞ்சாயத்து நடைபெறவில்லை என்பதால்தான், தேதி குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்து பற்றி தெரிந்திருந்தால், இந்த 7, 8 பிரதிவாதிகள் எவ்வளவு நிலத்தை வாங்கியிருக்கிறார்கள், அவர்கள் என்ன அனுபவம் செய்து வருகிறார்கள் என்ற விபரத்தை சொல்லியிருப்பேன் என்று சொன்னால், சரியல்ல. அதேபோல் நல்லியண்ணன் சந்திரன் மகன் காளியண்ணன் என்பவருக்கு 25 சென்ட் நிலத்தை விற்பனை செய்தார், அந்த விபரம் தெரியுமா என்றால், தெரியாது. அந்த விபரங்கள் தெரியாமல், பாகமே பிரியவில்லை என்று நான் கூறியிருப்பது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. எனவே, 1-ஆம் பிரதிவாதி நல்லியண்ணன் கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

<u>7, 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>

வழக்குப்போட்டுள்ள சொத்தின் முழு விபரமும் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். வாதி யார் யார் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரமும் எனக்குத் தெரியும் என்றால், சரிதான். தாவா சொத்திற்கு யார் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் இருக்கிறது என்று தெரிந்து கொண்டீர்களா என்றால், தெரியும், சின்னகுமார நாடார் பெயரில் உள்ளது. சின்னகுமார நாடார் பெயரில் இருக்கும் ஆவணங்களை நான் பார்த்திருக்கிறேனா என்றால், பார்க்கவில்லை. ஆவணங்களைப் பார்க்காமலே சின்னகுமார நாடார் பெயரில் இருப்பதாக நான் அனுமானத்தின் பேரில் கூறுகிறேன் என்றால், சரிதான். 1-ஆம் பிரதிவாதி 7-ஆம் பிரதிவாதிக்கு 2001-ஆம் ஆண்டே நிலத்தை விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான். அதேபோல் 2 முதல் 4 பிரதிவாதிகள் பெருமாளுக்கு (8-ஆம் பிரதிவாதி) 2007-ஆம் ஆண்டே ஒரு சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால், சரிதான். அவ்வாறு வாங்கப்பட்ட தேதியில் இருந்து சொத்துக்களில் இன்றைய தேதி வரை 7,8 பிரதிவாதிகள் தான் சுவாதீன அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால், சரிதான். அவர்கள் வாங்கியதற்கு பிறகு கிணறு

வெட்டி மின் மோட்டார் வைத்து, 7, 8 பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். இந்த பிரதிவாதிகள் தவிர வேறு நபர்களிடம் இருந்தும், அதேபோல் சொத்துக்களை வாங்கி, இந்த பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 3 -ஆம் நபர்களிடம் வாங்கிய நிலங்களை சமன்படுத்தி, சீர்செய்து, இந்த பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால், சரிதான். அதனால், இந்த வாதியோ, 1 முதல் 6 பிரதிவாதிகளோ 7,8 பிரதிவாதிகளின் சொத்தில் கூட்டாக அனுபவத்தில் இல்லை என்றால், சரிதான். எனவே, இந்த பிரதிவாதிகள் வாங்கிய சொத்தில் இந்த வாதி எவ்வித பங்கும் கேட்கவில்லை என்று சொன்னால், சரிதான்.

ஒப்பம் / கே. ஆறுமுகம்

ஒப்பம் / திருமதி. மு.பாக்கியம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.